<u>சார்பு நீதிமன்றம், துறையூர்.</u>

**முன்னிலை.திரு.C.விஜய்கார்த்திக்,M.A.,M.L.,**
**சார்பு நீதிபதி,**
**துறையூர்.**

## <u>OS.No.88/2024</u>

தேதி: 07.04.2026

பெயர் : செந்தில்குமார் (பி.வா.சா.1) த/பெ: ரெங்கநாதன்

<u>குறுக்குவிசாரணை</u>

1. நான் 8ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் நேஷனல் பர்மிட் லாரி டிரைவராக வேலை பார்க்கிறேன். வாதி வங்கி இந்த வழக்கை எதற்காக தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். வாதி வங்கி இந்த வழக்கில் என்னன்ன விவரங்கள் கூறியுள்ளார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. நான் இந்த வழக்கில் என்ன எதிர்வாதம் செய்கிறேன் என தெரியுமா என்றால் தெரியும். நான் என்னுடைய செங்காட்டுப்பட்டி கிராம நிலங்களுக்கான உரிமை ஆவணங்களை ஒப்படைத்து வா.சா.ஆ.9 ஆவணம் மூலம் கடன் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். நான் வா.சா.ஆ.9 ஆவணம் எழுதி கொடுத்து அதன் அடிப்படையில் எனக்கு ரூ.4,00,000/- கடன் கொடுக்க வாதி வங்கி ஒப்பு கொண்டு எனக்கு கடன் வழங்கியுள்ளார்கள் அதில் நான் கையெழுத்து செய்துள்ளேன் என்றால் சரிதான். கடன் அனுமதி கடிதம் வா.சா.ஆ.2 கடிதத்தில் 31.03.2017 முதல் 10 அரையாண்டு தவணைகளில் ரூ.40,000/- செலுத்துவதாக ஒப்பு கொண்டு நான் கையெழுத்து செய்து கடன் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி கடனுக்கு 9.45% வட்டி செலுத்துவதாக ஒப்பு கொண்டு தான் வா.சா.ஆ.2 மற்றும் 3 ஆவணம் நான் எழுதி கொடுத்துள்ளேன் என்றால் சரிதான்.

2. நான் வாங்கிய ரூ.4,00,000/- கடனுக்கு 2ம் பிரதிவாதி ரஞ்சிதம் ஜாமீன் பொறுப்பாளராக இருக்க ஒப்பு கொண்டு கையெழுத்து செய்து கொடுத்துள்ளார் எனவும்

அந்த ஆவணம் வா.சா.ஆ.8 என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி நான் கடனை கட்ட தவறினால் கட்டுவதாக ஒப்பு கொண்டு தான் ஜாமீன் கடிதம் எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரிதான். கடன் தொகைக்கு ரிசர்வ் வங்கி அவ்வப்போது மாற்றும் வட்டி வீதத்தை ஏற்று கொண்டு வட்டி செலுத்துவதாக நான் கடன் பெற்றுள்ளேன் என்றால் தெரியாது. கடன் தொகையை சரிவர செலுத்தவில்லை 2 சதவீத வட்டி அபராத தொகை செலுத்த வேண்டும் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வா.சா.ஆ.5 ஆவணத்தில் ரூ.4,00,000/- கடனுக்கு 11.25% கடன் திருப்பி செலுத்துவதாக ஒப்பு கொண்டு கையெழுத்து செய்துள்ளேன் என்றால் சரிதான். என் முதல் விசாரணை வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். என் முதல் விசாரணையில் 2ம் பிரதிவாதி வங்கி கணக்கிலிருந்து ரூ.50,000/- வாதி வங்கி முன்னறிவிப்பின்றி பிடித்தம் செய்ததாக கூறியுள்ளேன் அந்த தொகையை எனது கடன் கணக்கிற்காக வரவு வைத்துள்ளார்களா என்றால் இல்லை. ரூ.50,000/- பிடித்தம் செய்திருப்பதை காட்ட வங்கி கணக்கு பட்டியல் தாக்கல் செய்துள்ளேனா என்றால் வங்கியில் கணக்கு பட்டியல் தரவில்லை. கணக்கு பட்டியல் தரவில்லை என்ற விவரத்தை முதல் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை.

3. வாதி வங்கி நான் உரிமை ஆவணம் கொடுத்து பெற்ற கடனுக்காக அந்த சொத்துகள் பெயரில் முதல் நிலை தீர்ப்பாணை பிறப்பிக்க வேண்டி இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளது என்றால் சரிதான். என்மீது தனிப்பட்ட முறையில் பரிகாரம் கோரவில்லை எனவும், சொத்துகள் பெயரில் தான் பரிகாரம் கோரப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்திய ரிசர்வ் வங்கி 9% வட்டி மட்டுமே வசூல் செய்ய வேண்டுமென நான் கூறியுள்ளேன் அதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் சொல்வது போல் 9% வட்டி மட்டுமே வசூல் செய்ய வேண்டுமென எந்த சட்டத்திலும் இல்லை எனவும், நான் வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

நான் ஏற்கனவே வங்கியில் ஒப்பு கொண்டுள்ளபடி கடன் தொகையை வட்டியுடன் திருப்பி செலுத்த கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல. வாதி வங்கி தாவாவில் கோரியுள்ள படி செலவுதொகையுடன் தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

/ உண்மை நகல்/

(ஓம்/-C.விஜய்கார்த்திக்)
சார்பு நீதிபதி,
துறையூர்.